International Trade Centre

European Union

UNIDO

ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை வர்த்தகம்சார் உதவி

# பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) வர்த்தக போட்டித்திறனை அதிகரித்தல்









## செயற்றிட்ட சாரம்சம்

ஐரோப்பிய ஒன்றிய - இலங்கை வர்த்தகம்சார் உதவி செயற்றிட்டமானது பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) வர்த்தகப் போட்டித்திறனை அதிகரிப்பதற்கு இலக்கு வைத்துள்ளது.

8 மில்லியன் ஐரோப்பிய யூரோக்கள் பெறுமதியான நான்கு வருட ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியளிக்கப்பட்ட செயற்றிட்டமானது, உள்ளடக்கமான வர்த்தகம் தலைமையிலான வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒன்றிணைப்புக்கு பங்களிக்கின்றது. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) ஏற்றுமதி போட்டித்திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்குமான உயர் சாத்தியங்களுடன் துறைகளின் பெறுமதி சேர்த்தலுக்கு அது உதவுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட விருப்புரிமைக்கான திட்ட (GSP) பிளஸ் ஊடாக கிடைக்கும் சாத்தியமான சந்தர்ப்பங்களை இயன்றளவில் பயன்படுத்திக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகளிற்கு (SME) அனுமதிப்பதன் மூலம் உலக வர்த்தக அமைப்பின் (WTO) கொள்கைகள் மற்றும் ஒழுக்காற்று திருத்தங்களை ஒன்றிணைப்பதற்கு இலங்கைக்கு இந்த செயற்றிட்டம் உதவுகின்றது. பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பிற்குள் (SAARC) பெரும் பிராந்திய ஒன்றிணைப்பினையும் அது ஏதுவாக்கின்றது.

விசேடமாக சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) சந்தை அணுகும் வசதிக்கு பிரதான தடையான சந்தை எல்லைகளுக்கு இடையிலான நடைமுறைகளில் முழுமையான தரங்கள் மற்றும் வினைத்திறன்களை இந்த செயற்றிட்டம் அடையாளப்படுத்துகின்றது. வாசனைத் திரவியங்கள், உணவு மற்றும் தகவல் தொழினுட்பம்/தொழில் செயற்படுத்தல் அயலாக்கல் (IT/BPO) துறைகளில் பெறுமதிச் சங்கிலியை பரவலாக்குவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி தொடர்பில் உறுதியான கவனத்துடன் வர்த்தக ஆற்றல் கட்டியெழுப்பல் மற்றும் தொழினுட்ப உதவியை செயற்றிட்டம் வழங்குகின்றது.

வர்த்தகத்தில் பெருமளவில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (SME) மற்றும் ஏற்றுமதியாளர்களின் ஆற்றலை கட்டியெழுப்பலின் போது ஒரு இலக்குக் குழுவாக அவர்கள் உள்ளனர்.

## சூழல்

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாக சிறந்த ஏற்றுமதி சாத்தியம் கொண்ட நாடாக இலங்கை உள்ளது.

பிராந்திய வர்த்தக மற்றும் தொழில் மையமாக இலங்கை உறுதியாக வளர்ந்துள்ளது. தென்கிழக்காசியா மற்றும் மத்திய கிழக்குக்கு அருகில், துரிதமாக வளர்ந்து வரும் இந்திய துணை கண்டத்திற்கு அடுத்தாக, கிழக்கினையும், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவை இணைக்கும் பசுபிக் போன்ற பாரிய கப்பல் போக்குவரத்து பாதைகளின் குறுக்கே சார்க் பிராந்தியத்திற்குள் மூலோபாய நிலையில் அது உள்ளது.

வறுமையின் மட்டத்தில் ஒரு குறைபாடு மற்றும் அதிகரித்த தனிநபர் வருமானம் என்பவற்றை ஆலோசிக்கும் பல்வேறு குறிகாட்டிகளின் மத்தியில், அந்த வளர்ச்சியை உள்ளடக்கமானதாக உறுதி செய்யும் சவாலை இலங்கை எதிர்கொள்கின்றது. கிராமப் பகுதிகளிலும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் வறுமை என்பது அதிகளவில் உள்ளது. இளைஞர் வேலைவாய்ப்பின்மை (வயது 15-24) 19 வீதமாக கணிக்கப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் நாட்டின் தொழில் வலுவில் 35 வீதம் பெண்களாக இருந்தனர்.

பல்வேறு துறைகளில், இலங்கையில் 80 வீதமான தொழில்கள் சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சி (SME) ஆகும். மொத்த வேலைவாய்ப்பில் 35 வீதத்தினை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. தொழில் உருவாக்கத்திற்கான உயர் சாத்தியத்துடன் துறைகளில் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களினால் (SME) உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு ஆதரவளித்து, நாட்டின் உள்ளடக்கமான வளர்ச்சிக்கு பங்களிப்பதில் முக்கியமானதாக உள்ளது.

தமது அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் தனியார் துறை அபிவிருத்தியினை இலங்கை அரசாங்கம் முதனிலையில் வைத்துள்ளது. நாட்டின் வர்த்தக முன்னுரிமைகளுக்கு இந்த செயற்றிட்டம் ஆதரவளிக்கின்றது.

**ஒட்டுமொத்த குறிக்கோள்:**

இலங்கையின் உள்ளடக்கமான வர்த்தக தலைமையிலான வளர்ச்சிக்கு மற்றும் பிராந்திய ஒருங்கிணைத்தலுக்கு பங்களித்தல். அதன் மூலம் வறுமை ஒழிப்புக்கு பங்களித்தல்.

**விசேட குறிக்கோள்:**

பிராந்திய மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் இலங்கை சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிற்கான (SME) வர்த்தக திறனை அதிகரித்தல்.

**எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள்:**

- எ.பெ 1. , பிராந்திய ஒருங்கிணைத்தல் செயற்பாடு, ஐரோப்பிய ஒன்றிய GSP+ திட்டத்தினால் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள், ஒழுக்காற்று திருத்தங்கள் மற்றும் வர்த்தக பேரம் பேசல்கள் உள்ளடங்கலாக ஏற்றுமதி திறனுக்கான முழுமையாக வர்த்தக உபாயத்தை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- எ.பெ 2. எல்லைகளுக்கு இடையிலான நடைமுறைகளின் பரவலாக்கப்பட்ட வினைத்திறன் மற்றும் சார்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறைகளில் எல்லைகளுக்கு இடையிலான நடைறமுறைகளுடன் பொருந்தும் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) ஆற்றல்கள்.
- எ.பொ 3. பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் தர மற்றும் தேவைகளை எட்டுவதற்கு மேம்படுத்தப்பட்ட முழுமையான மற்றும் தரமான உட்கட்டமைப்பு சேவைகள்.
- எ.பெ 4. ஏற்றுமதி சார் துறைகளில் அதிகரிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (SME) போட்டித்திறன் (வாசனைத் திரவியங்கள், உணவு மற்றும் ITO/BPO துறை)

## எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள்

**எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு 1:** கொள்கைகள், ஒழுக்காற்று திருத்தங்கள் மற்றும் WTO, பிராந்திய ஒன்றிணைத்தல் செயற்பாடு, ஐரோப்பிய ஒன்றிய GSP+ திட்டம் என்பவற்றினால் அமைக்கப்பட்ட வர்த்தக பேரம் பேசல்கள் உள்ளடங்கலாக, ஏற்றுமதி போட்டித்திறனுக்கான ஒத்திசைவான வர்த்தக மூலோபாயம் வடிவமைக்கப்படல் மற்றும் நடைமுறைப்படுத்தப்படல்.

திறந்த பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இலங்கையானது, உலகளாவிய மற்றும் பிராந்திய சந்தைகளை நிறுவனங்களை அடைவதனை ஆதரவளிப்பதற்கு பல்வேறு பல்தரப்பு, பிராந்திய மற்றும் இரு தரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை தற்போது பேரம் பேசி வருகின்றது. இலங்கையானது தாராளவாத பொருளாதாரத்தை கொண்டுள்ளமையால், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் ஊகிக்கக் கூடிய வர்த்தக பிரிவுகளுடன் பொருந்தும் கொள்கை மற்றும் நெறிமுறைகள்சார் வரைபுநகல் உள்ளடங்கலாக வர்த்தக போட்டித்திறனுக்கான தேசிய ஏற்றுமதி மூலோபாயம் ஒன்றை விருத்தி செய்வது ஒரு சிக்கலான செயற்பாடாகியுள்ளது. இலங்கை பொருளாதாரமானது திறந்த பொருளாதாரமாக இருக்கின்ற போதிலும், ஏற்றுமதி **சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களி**னதும் (SME) சிக்கல்களை எதிர்கொள்வதுடன், சிக்கலான பல்தரப்பு, பிராந்திய மற்றும் உள்ளக வர்த்தகச் சூழல்களைப் புரிந்துகொள்வதற்கான தகவல்களில் பற்றாக்குறை நிலவுகின்றது. எனவே, அவற்றால் புதிய சந்தை சந்தர்ப்பங்களில் இருந்து முழுமையான பயன்களை பெற முடியாது மற்றும் சந்தை தேவைகளுடன் ஒத்திசையவும் முடியாது.

செயற்றிட்டமானது:

- நாட்டில் **சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின்** (SME) பயன்களுக்காக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் தனியார் துறையின் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய ஏற்றுமதி மூலோபாயம் ஒன்றை வடிவமைப்பதுடன், அதன் நடைமுறைப்படுத்தலுக்கான ஆலோசனை உதவியை வழங்கும்.
- வர்த்தக பேரம் பேசல்களின் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான தேசிய ஆற்றல்களை வலுப்படுத்தும்.
- வர்த்தக நிவாரணப் பிரிவு ஒன்றை உருவாக்கும்.
- ஒத்திசைவான வர்த்தக கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான வர்த்தக பரிந்து பேசலில் ஈடுபடுவதற்கு தனியார் துறைக்கு ஆதரவளிக்கும். மற்றும்
- முக்கியமான வர்த்தக கொள்கை, நெறிமுறை மற்றும் பேரம் பேசல் விடயங்கள் தொடர்பில் பொது-தனியார் துறை கொள்கை உரையாடலை தூண்டும்.

எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு 2: எல்லைகளுக்கு இடையிலான நடைமுறைகளின் பரவலாக்கப்பட்ட வினைத்திறன் மற்றும் சார்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறைகளில் எல்லைகளுக்கு இடையிலான நடைறமுறைகளுடன் பொருந்தும் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) ஆற்றல்கள்.

இலங்கையில் வர்த்தகச் சூழலானது மேம்பட்டுள்ள நிலையில், ஏற்றுமதி **சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களா**னது (SME) இப்போதும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றது. பிராந்திய மற்றும் சர்வதேச சந்தைகளில் அவற்றின் போட்டித்திறனை அது கட்டுப்படுத்துகின்றது. நாட்டின் வர்த்தகச் சூழலை முன்னேற்றுவதற்கு மற்றும் பிராந்திய (சார்க்) மற்றும் சர்வதேச (ஐரோப்பிய ஒன்றியம்) சந்தைகளில் இலங்கை **சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின்** (SME) வர்த்தகப் போட்டித் திறனை அதிகரிப்பதற்கு எல்லையோர செயற்பாடுகளை வசதிப்படுத்தல் முக்கியமானதாகும்.

செயற்றிட்டமானது:

- சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) தகவலறிந்த பங்குபற்றலை தூண்டுவதற்கான மற்றும் 2016ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையால் ஏற்புறுதி
- SPS மற்றும் சந்தை தேவைகளுக்கு உடன்படல்.
- துறை இணைதலை வலுப்படுத்தல்.
- செய்யப்பட்ட WTOஇன் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலை ஆதரவளிப்பதற்கு ஒரு தளமாக தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவினை வலுப்படுத்தல்.
- சர்வதேச வர்த்தக பரிமாற்ற தகவல்களுக்கு வெளிப்படைத்தன்மை மற்றும் அணுகும் தன்மையை பரவலாக்குவதற்கு **சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான** (SME) தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் தகவல் மையம் ஒன்றினை உருவாக்கல்.
- தனிப்பலகணி முறையின் நடைமுறைப்படுத்தலுக்கான ஆலோசனை சேவைகளை வழங்கல், மற்றும்
- எல்லைகளுக்கு இடையிலான நடைமுறைகளை **சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின்** (SME) முகாமை செய்வதற்கும் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய மற்றும் சார்க் சந்தைகளின் தேவைகளுடன் ஒத்திசைவதற்கு இயலுமை கட்டியெழுப்பல் பயிற்சிகளை வழங்கல்.

**எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு 3:** பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் தர மற்றும் தேவைகளை எட்டுவதற்கு மேம்படுத்தப்பட்ட முழுமையான மற்றும் தரமான உட்கட்டமைப்பு சேவைகள்.

விநியோக ஆற்றலை அதிகரிப்பது முக்கியமாகும். ஆனால், உலக சந்தைக்கு அனுமதியை ஈட்டும் அல்லது பிராந்திய ஒத்திசைவு மற்றும் ஒருங்கிணைப்பை எட்டுவதற்கு போதுமானதாக இருத்தல் வேண்டும். முக்கியமான அளவானது எட்டப்பட்டதன் பின்னர், சர்வதேச மற்றும் பிராந்திய சந்தைகளால் கோரப்பட்ட ஒரு குறிப்பிட்ட தரத்தினை அடையும் பிரச்சினையும், சர்வதேச தரங்கள் மற்றும் தொழிநுட்ப விதிகளுக்கு இசைதலை நிரூபிக்கும் சவாலும் தோன்றும். தரங்கள் மற்றும் தொழிநுட்ப நெறிமுறைகளுக்கு பொருந்திச் செல்லலுக்கு மேலதிகமாக, சுற்றுச் சூழல் அல்லது மக்களை மோசமாக பாதிக்காத நிலையான பயற்சிகளை பிரயோகிப்பதனை தயாரிப்பாளர்கள் வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுச் சூழல் முகாமைத்துவம் மற்றும் சமூகப் பொறுப்பு பகுதிகளுக்கான சர்வதேச தரங்கள் மற்றும் வழிகாட்டிகள் குறித்தும், மற்றும் அவற்றை பிரயோகிப்பது குறித்தும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

செயற்றிட்டமானது:

- தேசிய தரக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு, தொழிநுட்ப ஆற்றலை பரவலாக்குவதற்கு மற்றும் தர, புறச்சுகாதார மற்றும் பைடோசெனிட்டரி தேவைகளுடன் பொருந்துவதனை மேம்படுத்துவதற்கு தர நிகழ்ச்சி ஒன்றின் ஊடாக பிராந்திய மற்றும் பல்தரப்பு வர்த்தக முறைக்குள் ஒன்றிணைப்பதற்கு இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல், மற்றும்
- **சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின்** (SME) தரம்சார் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு போதியளவு தொழிநுட்ப அறிவுடன் உள்ளூர் நிபுணத்துவத்தின் விருத்திக்கு ஆதரவளித்தல்.

**எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு 4:** ஏற்றுமதி சார் துறைகளில் அதிகரிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) போட்டித்திறன் (வாசனைத் திரவியங்கள், உணவு மற்றும் ITO/BPO துறை)

வெளிநாட்டு சந்தையை அணுகுவதற்கு பல்வேறு சவால்களை இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சி (SME) எதிர்கொள்கின்றது. அவற்றை அடையாளப்படுத்துவதில் இந்த செயற்றிட்டம் கவனம் செலுத்தும். வறுமை ஒழிப்பு இலக்குகளில் ஆதரிக்கப்பட்ட துறைசார் மற்றும் சந்தைசார் அணுகுமுறையை அது உள்வாங்கும். முன்னுரிமைப்படுத்தப்பட்ட துறைகளில் வாசனைத் திரவியம், உணவு மற்றும் ITO/BPO துறைகள் உள்ளடங்கும்.

சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிற்கான (SME) நேரடி ஆதரவில் உள்ளடங்குவன:

- வர்த்தக நாமம் மற்றும் சந்தைப்படுத்தல்
- கொள்வனவு செய்பவருடன் தொழிலுக்கு தொழில் தொடர்புகள்

## செயற்றிட்ட பங்காளர்கள்

### ஐரோப்பிய ஒன்றியம்

8 மில்லியன் யூரோ, ஐரோப்பிய ஒன்றிய - இலங்கை வர்த்தகம் சார் உதவி செயற்றிட்டம்: ''பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) வர்த்தக போட்டித்திறனை அதிகரித்தல்'' என்பது ஐரோப்பிய ஒன்றியத்தினால் முழுமையாக நிதியளிக்கப்பட்டதாகும்.

தெற்கு மற்றும் வடகிழக்கு ஆசியாவில் சார்க் மற்றும் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைச் (SAFTA) செயற்பாட்டுச் சூழலில் பிராந்திய ஒன்றிணைப்புக்கு ஆதரவளிக்கும் நோக்குடன், மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP வரைபுநகலுக்கான சந்தை அணுகும் வசதியுடன் 2014-2020இற்கான ஆசியாவுக்கான ஐரோப்பிய ஒன்றிய பிராந்திய பல்லாண்டு குறிக்கோள் நிகழ்ச்சியின் ஒன்றிணைந்த பகுதியாக அது உள்ளது.

European Union

### இலங்கை அரசாங்கம்

இலங்கை அரசாங்கத்தினை முன்னிலையில் கொண்ட செயற்றிட்டமாக இந்த செயற்றிட்டம் உள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்த செயற்றிட்டம், இலங்கை அரசாங்கத்தினால் இலங்கை வர்த்தக திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் கூட்டாக நடைமுறைப்படுத்தப்படும்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு, தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, மற்றும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு என்பவற்றினால் துணை தலைமை வகிக்கப்படும் செயற்குழு ஒட்டுமொத்த வழிகாட்டலை வழங்கும். பணித்திட்ட அபிவிருத்தி மற்றும் நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தலுக்கு திறன் மிக்க தேசிய மட்ட நிறுவனங்கள் மற்றும் உச்சநிலை வர்த்தக அங்கங்கள் ஆதரவளிக்கும்.

### சர்வதேச வர்த்தக நிலையம் (ITC)

சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) சர்வதேசமயப்படுத்தலுக்கு ஆதரவளிப்பதற்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் ஒரேயொரு அபிவிருத்தி நிறுவனமான சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) உள்ளது. வருமானத்தை அதிகரித்தல் மற்றும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை குறிப்பாக பெண்களுக்கு, இளைஞர்களுக்கு மற்றும் வறிய சமூகங்களுக்கு உருவாக்கல் என்பவற்றுடன் வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்காக போட்டித்திறன் மிக்கதாக இருப்பதற்காகவும் சர்வதேச சந்தையுடன் இணைந்திருப்பதற்கும் நிலைமாறு பொருளாதாரங்களை விருத்தி செய்ய சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிக்கு ITC உதவுகின்றது. 1964இல் உருவாக்கப்பட்ட ITCஆனது, ஐக்கிய நாடுகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பின் கூட்டு நிறுவனமாகும்.

செயற்றிட்டத்திற்கான முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனமாக ITC உள்ளது.

International Trade Centre

### ஐக்கிய நாடுகள் தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனம் (UNIDO)

வறுமை ஒழிப்பு, உள்ளடக்கமான உலகமயமாதல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேறு தன்மைக்கு தொழிற்றுறை அபிவிருத்தியை முன்னிறுத்தும் ஐ.நாவின் விசேட நிறுவனமான ஐக்கிய நாடுகள் தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனம் (UNIDO) உள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மற்றும் நிலைமாறு பொருளாதாரங்களில் உள்ளடக்கமான மற்றும் நிலையான தொழிற்றுறை அபிவிருத்தியை முன்னிறுத்தல் மற்றும் தூண்டுவதே UNIDOஇன் பணிநோக்கமாகும்.

வாசனைத் திரவியம் மற்றும் உணவு துறை பெறுமதி சங்கிலிகளில் தேசிய தரக் கட்டமைப்பை வலுப்படுத்தல் மற்றும் தர மற்றும் புறச்சுகாதார மற்றும் பைடோசெனிட்டரி தேவைகளுடன் இசைந்து போதலை மேம்படுத்தல் சார்ந்த செயற்றிட்டத்தின் பகுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு UNIDO பொறுப்பானதாகும்.

UNIDO

*ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் இந்த துண்டுபிரசுரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் உள்ளடக்கங்கள் எந்த வகையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துக்களை பிரதிபலிப்பன அல்ல.*

International Trade Centre

Ms. சொனாலி விஜேரட்ன
வர்த்தக பணிப்பாளர் நாயகம்
வர்த்தக திணைக்களம்
தொ.பே: +94 11 243 0068
மின்னஞ்சல்: dgc@doc.gov.lk
தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு
4வது மாடி, 'ரக்ஷன மந்திரய'
21 வொக்சோல் வீதி, கொழும்பு 2
இலங்கை

திரு தயாரத்ன சில்வா
தேசிய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர்
EU – இலங்கை வர்த்தகம் சார் உதவி
தொ.பே.: +94 11 231 4236
மின்னஞ்சல்: dsilva@intracen.org
CWE செயலக கட்டடம், 9வது மாடி,
27 வொக்சோல் வீதி, கொழும்பு 2,
இலங்கை
www.intracen.org

Ms. சில்வியா பீடெம்ப்ஸ் கொச்சின்
வர்த்தக மேம்பாட்டு அதிகாரி
ஆசிய பசுபிக்கிற்கான அலுவலகம்
தொ.பே.: +41-22 730 0111
மின்னஞ்சல்: betemps@intracen.org
சர்வதேச வர்த்தக நிலையம்,
Palais des Nations, 1211 ஜெனீவா 10,
சுவிட்சர்லாந்து
www.intracen.org